# காரைநகர் பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய காரைநகர் பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி காரைநகர் பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம்**

| | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டல்கள் | | | 01 | 4,406,253 | - | - | 01 | 654,048 |
| நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டல்கள் | 01 | 700 | - | - | 01 | 407 | - | - |

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,630,336 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,893,244 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்ட சட்டங்கள். விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| **(அ)** 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| 150(ஏ) ஆம் பிரிவு | ரூபா 426,356 நிலுவையான வபியினை அறவிடுவதற்கு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்கு விதிகள்** | |
| (i) 81 ஆம் ஒழுங்குவிதி | சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் காணிக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பு டைய முத்திரை வரிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பித் திருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீணவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,697,266 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீணடுவரும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 2,426,089 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை** | **பாதிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வீதவரிகள் மற்றும் வரிகள் | 1,450 | 1,247 | 228 | - | 60 | 228 |
| குத்தகை வாடகை | 387 | 345 | - | 365 | 267 | - |
| உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் | 131 | 127 | - | 121 | 110 | - |
| வேறு வருமானங்கள் | 11,866 | 9,287 | 557 | 10,043 | 7,977 | 1,685 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு நியதிச் சட்டங்களின் கீழ் 2010 திசெம்பர் 31 வரை காரைநகர் நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 349,950 நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 ஆமம் ஆண்டிற்காகப் பெறப்படவேண்டிய முத்திரைக் கட்டணங்களை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 அரசிறைக் கடனாளிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 785,000 வீதவரிகள், வியாபாரக் கடை வாடகை வருமானங்களை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

சபையின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு உள்ளவாறான செலவினமும் உரிய விலகல்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதீடு செய்யப்ட்டவை | உள்ள படியானவை | முரண் |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 8,725 | 4,937 | 3,788 | 6,887 | 4,879 | 2,008 |
| ஏனையவைகள் | 2,257 | 1,372 | 885 | 1,860 | 1,109 | 751 |
| **உப மொத்தம்** | **10,982** | **6,309** | **4,673** | **8,747** | **5,988** | **2,759** |
| **மூலதனச் செலவினம்** | 15,620 | 6,525 | 9,095 | 14,781 | 4,892 | 9,889 |
| **முழு மொத்தம்** | **26,602** | **12,834** | **13,768** | **23,528** | **10,880** | **12,648** |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளபடியான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| பதவி நிலை மட்டம் | 01 | - |
| இரண்டாம் மட்டம் | 09 | 10 |
| ஆரம்ப மட்டம் | 16 | 09 |
| ஏனையோர் | - | 05 |
| | 26 | 24 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் | எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|
| (அ) கணனிகள் | 02 | 59,700 |
| (ஆ) நீர்க்குளாய்கள் | 02 | 30,000 |
| (இ) நீர் பவுசருடன் கூடிய டிரக்ரர் | 01 | 170,000 |
| | 05 | 259,700 |

### 2.5.2 பெறப்பட வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 784,933 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 435,483 ஆகும்.

### 2.5.3 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ஊழியர் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,522,539 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 37,400 ஆகும்.

### 2.5.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலாக அசைவற்றிருந்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 396,829 ஆகும்.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக ரீதியான கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 16,479,224 ஆகும்.

### 2.6 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2009 ஜனவரி 28 ஆந் திகதிய பீரீ/01/2009 ஆம் இலக்க வட மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக பொருள் மெய்மையாய்வுச் சபை அங்கத்தினர்களிற்கு ரூபா 13,000 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 செயற்பாட்டுச் வினைத்திறனின்மை

வட மாகாண சபையினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த காரைநகர் கசூரினா கடற்கரையிலுள்ள இரண்டு கடைகள் 2011 யூன் வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.8 செயலாற்றுகை

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோள்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

### 2.9 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) மனித வளம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) வாகனப் பாவனை